# பிராந்திய அபிவிருத்தியில் தம்புள்ள விவசாய சந்தையின்பங்கு

சுவீதா.இ[1]*, இரவீந்திரன்.செ[2]

புவியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
*suveeranjith@gmail.com[1] , raveendranlk@yahoo.com[2]*

**ஆய்வுச்சுருக்கம் -** ஆய்வானது தம்புள்ள விவசாய சந்தையின் திறன்களை முன்னேற்றுவதன் மூலம் பிராந்திய வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும் என்பதை ஆய்வு செய்கின்றது. இலங்கையில் மத்திய வேளாண்மை மாவட்டமாக தம்புள்ளை காணப்படுகின்றது. தம்புள்ள விவசாய சந்தை இலங்கையின் மிக பெரிய விவசாய சந்தையாகும். தம்புள்ள விவசாய சந்தை அண்டை நகரங்கள், கிராமங்களுக்கு தனது சேவையை வழங்குகின்றது. இவை பாரம்பரிய விவசாய உற்பத்திகளை ஊக்குவிக்கக்கூடிய வகையில் பொருட்களுக்கான கேள்வியை சந்தையில் உருவாக்குகின்றது.ஜ1ஸஇவ் ஆய்விற்காக தம்புள்ள நகரத்தின் விவசாய சந்தை பகுதி ஆய்வு பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதி இலங்கையின் முக்கிய மையப்பகுதியில் அமைந்துள்ளதோடு இது இலங்கையின் மாற்றீட்டு மையம் ஆகவும் இயக்கத்தன்மை வாய்ந்த பல்வேறு வகைப்பட்ட துடிப்பான வர்த்தக பொருளாதார மையமாகவும் விளங்குகின்றது.

இவ் ஆய்வானது தம்புள்ள விவசாய சந்தை எவ்வளவு துாரமான சமூக, பொருளாதார அபிவிருத்தியில் பங்களிப்பு செய்கின்றது என்பதனையும் கிடைக்கப் பெறுகின்ற பொருளாதார ரீதியிலான நன்மைகள், சந்தை உருவாவதற்கு செலவு செய்யப்பட்ட முதலீட்டுக்கு ஏற்ப வருமானம் கிடைக்கின்றதா? மற்றும் அங்குள்ள அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றினை மதிப்பீடு செய்வதனை நோக்கமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வின் நோக்கங்களை அடைவதற்குத் தேவையான தம்புள்ள விவசாய சந்தையின் தற்போதைய நிலைமைகள், பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள், வர்த்தக நடவடிக்கைகள்,சந்தையினால் கிடைக்கும் வருமானம் போன்ற தரவுகள் நேரடி அவதானிப்பு, வினாக்கொத்து, நேர்காணல் போன்ற முதலாம் நிலைத்தரவுகள் மூலமும் இரண்டாம் நிலைத்தரவுகள் மூலமும் பெற்றுக்கொள்ளப்பட்டது. இவ் ஆய்விற்கு முக்கிய தரவு சேகரிப்பு முறையான வினாக்கொத்து மூலம் தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டு சமூக விஞ்ஞான புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு நுட்பம் (SPSS) எனும் கனனி மென்பொருளைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் விபரண பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இவ் ஆய்வின் கண்டுபிடிப்புக்களாக தம்புள்ள விவாசாய சந்தையின் சேவைப்பகுதியாக இலங்கையின் அனைத்து மாகாணங்களும் காணப்படுகின்றது.ஜ2ஸ இங்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவு வழங்கப்பட்டு காணப்பட்டாலும் வினைத்திறனை அதிகரிப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகளின் தேவைப்பாடுகளும் காணப்படுகின்றன. தம்புள்ள விவசாய சந்தைக்கு பொருட்களை கொண்டு வருகின்ற விவசாயிகள், சேகரிப்பாளர்கள் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்கின்ற மொத்த, சில்லறை விற்பனையாளர்கள் பொருளாதார ரீதியான வருமானங்களை பெற்று நன்மையடைகின்றனர். தம்புள்ள விவசாய சந்தையிலிருந்து முதலீட்டுக்கு ஏற்ப ஆறுமடங்கு வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதோடு சந்தை குத்தகைக்கு விடப்பட்டு 72 மில்லியன் ரூபா வருமானமும் கிடைக்கப் பெறுகின்றமை போன்றனவும் கண்டறியப்பட்டுள்ளன.[3] இவற்றை அடிப்படையாகக் கொண்டு தம்புள்ள விவசாய சந்தையின் வினைத்திறனான செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ் ஆய்வின் முடிவாக தம்புள்ள விவசாய சந்தை குறிப்பிட்ட ஒரு பிராந்தியத்திற்கு மட்டுமல்லாது இலங்கை முழுவதும் சேவையை வழங்கும் மையம் என இனங்காணப்பட்டுள்ளது.

**முதன்னிலைச் சொற்கள்:** பிராந்தியம் பிராந்திய அபிவிருத்தி, விவசாய பொருளாதார மத்திய நிலையம்.

## I. ஆய்வின் அறிமுகம்

ஆய்வானது தம்புள்ள விவசாய சந்தையின் திறன்களை முன்னேற்றுவதன் மூலம் பிராந்திய வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும் என்பதை ஆய்வு செய்கின்றது. இவ் ஆய்விற்காக தம்புள்ள நகரத்தின் விவசாய சந்தை பகுதி ஆய்வு பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது இவ் ஆய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. தம்புள்ள விவசாய சந்தை எவ்வளவு துாரம் தனது சேவையை வழங்குகின்றது என அதன் சேவைபகுதியை மதிப்பீடு செய்தல்
2. தம்புள்ள விவசாய சந்தையின் வினைத்திறனை செயற்பாடுகளை மேற்கொள்ள அங்குள்ள அடிப்படை உட்கட்டமைப்பு வசதிவாய்ப்புகளை மதிப்பீடு செய்தல்.
3. தம்புள்ள விவசாய சந்தையில் சந்தைபடுத்துவோர், கொள்வனவு செய்வோர்க்கிடையில் நிகழும் விவசாய உற்பத்தி பரிமாற்றத்தால் ஏற்படும் பொருளாதார நன்மைகளை மதிப்பீடு செய்தல்
4. தம்புள்ள விவசாய சந்தை பாரிய முதலீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு திட்டம். இதற்கு கொடுக்கப்பட்ட முதலீட்டில் இருந்து அதற்கேற்ப வருமானம் திரும்ப கிடைக்கின்றதா என மதிப்பீடு செய்தல்.

இவ் ஆய்வானது பின்வரும் பிரச்சனைகளை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தம்புள்ள விவசாய சந்தையில் இதுவரை உள்ளூர், பிராந்திய, தேசிய அளவில் வழங்கும் பொருளாதார நன்மைகள் மதிப்பீடு செய்யப்படவில்லை. தற்சமயம் இவ் விவசாய சந்தை உள்ளூர் பிராந்திய, தேசிய அளவில் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு எவ்வளவு துாரம் பங்களிப்பு செய்கின்றது என்பது பற்றி மதிப்பீடு செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. முதலீட்டில் இருந்து சந்தைக்கு திரும்ப கிடைக்கப் பெறுகின்ற வருமானம் தொடர்பில் தெளிவில்லாமல் இருக்கின்றது. இலங்கையின் முதல் பிராந்திய சந்தைப்படுத்தல் மையம் தம்புள்ள விவசாய

சந்தையாகும். இது 115 மில்லியன் ரூபா முதலீட்டில் ஸ்தாபிக்கப்பட்டது.[4] இச் சந்தைக்கு முதலீட்ட தொகையினை மீள பெற்றுக்கொண்டார்களா? இதிலிருந்து சரியான வருமானம் வருகின்றதா? சந்தை திட்டமிட்டவர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப தொழிற்படுகின்றதா? போன்றவற்றில் தெளிவில்லாத் தன்மை காணப்படுகின்றது. இத் திட்டம் உருவாக்கப்பட்டதுக்கான இலக்குகள் நோக்கங்கள் அடையப்பட்டுள்ளதா? என்பதனை மதிப்பீடு செய்ய வேண்டிய தேவை காணப்படல். சந்தையின் பொருளாதார திறனை ஊக்குவித்து பிராந்திய அபிவிருத்தியை மேம்படுத்த என்ன தேவை காணப்படுகின்றது. போன்றன இவ் ஆய்வின் முக்கிய பிரச்சனைகளாக காணப்படுகின்றது. இவ் விவசாய சந்தை போன்ற மாதிரியை ஊக்குவிப்பதற்கு அல்லது இதே மாதிரியை வேறு பிராந்தியத்தில் நடைமுறைப்படுத்துவதென்றால் இவ் விவசாய சந்தையால் கிடைக்கப்பெறுகின்ற சமூக பொருளாதார நன்மைகள் பற்றி மதிப்பீடு செய்வதும் அவசியம்.

இந்த விவசாய சந்தையில் பெரிய நிலம், சந்தை கட்டமைப்பு, சேவை வசதிகள், முகாமைதுவ முறைகள் என்பன இருக்கின்றன. அதற்கு ஏற்ப அவ் சமூகத்திற்கு வெளியீட்டை இச் சந்தை வழங்க வேண்டும். அந்த அளவிற்கு தம்புள்ள விவசாய சந்தை வழங்குகின்றதா என்பதை கண்டறிய வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது. தம்புள்ள விவசாய சந்தை சுற்றியிருக்கும் சுற்றயலுக்கு எவ்வளவு துாரமான நன்மையை வழங்குகின்றது என்பதிலிருந்து பிராந்திய அபிவிருத்திக்கு செய்யும் பங்களிப்பை விளக்குதல். இவை இவ் ஆய்வின் பிரச்சனைகளாகும்.

**தம்புள்ள விவசாய சந்தையில்**

- இதுவரை உள்ளுர் பிராந்திய தேசிய அளவில் வழங்கும் பொருளாதார நன்மைகள் மதிப்பீடு செய்யப்படவில்லை.
- முதலீட்டில் இருந்து சந்தைக்கு திரும்ப கிடைக்க பெற்ற தற்போது கிடைக்கப்பெறுகின்ற வருமானம் தொடர்பில் தெளிவில்லை.
- சந்தையின் பொருளாதார திறனை ஊக்குவித்து பிராந்திய அபிவிருத்தியை மேம்படுத்த என்ன தேவை காணப்படுகின்றது.

போன்ற பிரச்சினைகள் முன்னய ஆய்வுகளில் மீளாய்வு செய்யப்பட்டும். ஆய்வு பிரதேசத்திற்கு நேரடியாக சென்று அவதானித்தும் வரையறுக்கப்பட்டது.

இவ்வாய்விற்கான தரவுகள் முதலாம் நிலை, இரண்டாம் நிலைத்தரவுகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டு விபரண, புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இவ் ஆய்வின் முடிவாக தம்புள்ள விவசாய சந்தை குறிப்பிட்ட ஒரு பிராந்தியத்திற்கு மட்டுமல்லாது இலங்கை முழுவதும் சேவையை வழங்கும் மையம் என இனங்காணப்பட்டுள்ளது.

### II. ஆய்வு முறையியல்

பிராந்திய அபிவிருத்தியில் தம்புள்ள விவசாய சந்தையின் பங்கு என்னும் இவ் ஆய்வினுடைய ஆய்வு முறையியலை நோக்குகின்ற போது முதலாவதாக பிரச்சனையை வரையறுத்தல் காணப்படுகின்றது. தொடர்ந்து இவ் ஆய்விற்கு வலுவூட்டும் வகையில் முன்னைய ஆய்வுகள் சேகரிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டது. தொடர்ந்து இவ் ஆய்விற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன.

### III. தரவும் இ தரவு சேகரிப்பு முறையும்

இவ் ஆய்விற்காக முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளாக நேரடி அவதானிப்பு மூலம் தம்புள்ள விவசாய சந்தையின் கட்டமைப்பு, பௌதீக உட்கட்டுமான நடவடிக்கைகள், வர்த்தக வியாபார நடவடிக்கைசார் தரவுகள்பெற்றுக்கொள்ளப்பட்டது. நேர்காணல் மூலம் தம்புள்ள விவசாய சந்தையின் தற்போதைய பொருளாதார நன்மைகள், தம்புள்ள விவசாய சந்தையின் சேவைப்பரப்பு போன்ற தரவுகள் தம்புள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர், கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு முகாமையாளர், தம்புள்ள விவசாய சந்தை முகாமைத்துவ அலுவலகர், விவசாய சந்தையில் தொழில்புரியும் ஊழியர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள் போன்றோரிடம் கட்டமைக்கப்படாத வினாக்களை கேட்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

வினாக்கொத்து மூலம் தம்புள்ள விவசாய சந்தையின் சேவைப் பகுதி, அடிப்படை உட்கட்டமைப்பு வசதிவாய்ப்புக்கள், கிடைக்கப்பெறுகின்ற பொருளாதார நன்மைகள், வருமானம் சார் வினாக்களை உள்ளடக்கியதாக வினாக்கொத்து தயாரிக்கப்பட்டு விவசாய சந்தையின் பங்குதாரர்களான விவசாயிகள், முதன்மை வர்த்தகர்கள், மொத்த விற்பனையாளர்கள், ஊழியர்கள், போன்றோரிடம்

பூர்த்தி செய்யப்பட்டது. வினாக்கொத்து நோக்க அடிப்படை மாதிரி எடுப்பு (purposive sampling) முறை மூலம் காலை 06 மணி முதல் மாலை 06 மணி வரை ஒரு மணித்தியாலத்திற்கு 15 என்ற அடிப்படையில் 150 வினாக்கொத்துக்கள் பூர்த்தி செய்யப்பட்டது. வினாக்கொத்துக்கள் சமூக விஞ்ஞான புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு நுட்பம் (SPSS) என்னும் மென்பொருளை பயன்படுத்தி தொகுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு முதலாம் நிலைத்தரவுகள், தகவல்கள் பெறப்பட்டது.

இரண்டாம் நிலைத்தரவுகளாக தம்புள்ள விவசாய சந்தையின் வசதிவாய்ப்புக்கள், உட்கட்டுமானங்கள் தம்புள்ள விவசாய சந்தையின் முன்மொழியப்பட்ட திட்டத்தின் இலக்கு, நோக்கங்கள், செயற்பாடுகள், நிலப்பயன்பாடு, விவசாய சந்தையின் முகாமைத்துவம் சார் தரவுகள், விவசாய சந்தையின் முகாமைத்துவ அறிக்கைகள், நகர அபிவிருத்தி அதிகார சபையின் அறிக்கைகள் மூலமும் பெறப்பட்டு இவை ஆய்விற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

### IV. தரவுப்பகுப்பாய்வு

சேகரிக்கப்பட்ட முதலாம், இரண்டாம் தரவுகளானவை சமூக விஞ்ஞான புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு நுட்பம் (SPSS) மென்பொருள் நுட்பங்களின் ஊடாக ஒவ்வொரு நோக்கங்களிற்கும் தனித்தனியாக விபரண, புள்ளிவிபரவியல் ரீதியான முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டடு விளக்கப்பட்டடுள்ளது. முதலாவது நோக்கத்திற்கு அமைவாக தம்புள்ள விவசாய சந்தைக்கு வருகின்ற மக்களின் நோக்கம், எப்பகுதியிலிருந்து கொள்வனவு சேவையை பெற்றுக்கொள்ள வருகின்றனர், தம்பள்ள சந்தை பொருட்கள் பரிமாற்றப்படும் பரம்பல், தம்புள்ள விவசாய சந்தை பொருட்களை விநியோகம், கொள்வனவு செய்யும் மாவட்டங்கள், மாகணங்கள் என்பவற்றின் அடிப்படையில் சேவைப்பகுதி கண்டுபிடிக்கப்பட்டது.

இரண்டாவது நோக்கம் வினாக்கொத்து மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி அடிப்படை வசதிவாய்ப்புக்களின் தன்மை இனங்காணப்பட்டது. மூன்றாவது நோக்கம் தம்புள்ள விவசாய சந்தையின் விலை நிர்ணயம், உற்பத்தி வளங்கள், மாதாந்த விலை ஏற்ற இறக்கம், விநியோகஸ்தர் விநியோக அளவு கிடைக்கப் பெறுகின்ற இலாபம் போன்றன முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் மூலம் கிடைக்கப்பெறும் பொருளாதார நன்மை கண்டறியப்பட்டுள்ளது.


நான்காவது நோக்கம் நிலப்பெறுமதி, கட்டணம், மாதாந்த வாடகை, வரிப்பணம், முகாமைத்துவ செலவுகள், மாதாந்த வருமான அறிக்கை போன்ற இரண்டாம் நிலைத்தரவுகள் மூலம் சந்தையினால் திரும்ப கிடைக்கப்பெறுகின்ற வருமானம் கண்டுபிடிக்கப்பட்டது

### V. ஆய்வின் முடிவுகளும் பரிந்துரைகளும்

#### I. ஆய்வின் முடிவுகள்

பிராந்திய அபிவிருத்தியில் தம்புள்ள விவசாய சந்தையின் பங்கு என்னும் இவ் ஆய்வு கட்டுரையில் கருத்தியல், எண்ணியல் சார் தரவுகளானவை முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளும், சமூக விஞ்ஞான புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு நுட்பம் (SPSS)போன்ற மென்பொருள் நுட்பத்தினூடாக தரவுகள் சேகரிக்கப்பட்டு விபரண புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு செய்யப்பட்டு தம்புள்ள விவசாய சந்தையின் திறனை ஊக்குவிக்க பொருத்தமான உத்திகள் தந்திரோபாயங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு இன்றைய நிலையில் தம்புள்ள விவசாய சந்தை எவ்வளவு தூரம் தனது சேவையை வழங்குகின்றது. என அதன் சேவைபகுதியை மதிப்பிடுவதன் மூலம் முடிவாக தம்புள்ள விவசாய சந்தையின் சேவைப்பகுதியாக இலங்கை தீவின் அனைத்து மாகாணங்களும் காணப்படுகின்றது.

ஒளிப்படம்-1 தம்புள்ள சந்தை பொருட்கள் பரிமாற்றப்படும் பரம்பல்




(மூலம் - வினாக்கொத்து, பங்குனி, 2017)

தம்புள்ள விவசாய சந்தைக்கு விவசாய உற்பத்தி பொருட்களை கொண்டுவருதல், கொண்டு செல்லல் என்ற இரண்டு அடிப்படையில் பொருட்களை கொண்டுவருவதில் ஒன்பது மாகாணத்திலிருந்தும் கொண்டுவரப்பட்டு எடுத்து செல்லப்படுகின்றது. மத்திய மாகாணத்திற்கு அதிகளவு பொருட்கள் கொண்ட செல்லப்படவதும், கொண்டுவரப்படுவதும் காணப்படுகின்றது. மாவட்ட அடிப்படையில் தம்புள்ள விவசாய சந்தைக்கு விவசாய உற்பத்தி பொருட்கள் 15 மாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்படுகின்றது.

அட்டவனை -1 தம்புள்ள விவசாய சந்தைக்கு பொருட்களை கொண்டுவருகின்ற மாவட்டங்கள்

| மாவட்டங்கள் | வீதம் % |
|---|---|
| மாத்தளை | 6.67% |
| நுவரேலியா | 3.07% |
| குருநாகல் | 13.45% |
| கண்டி | 12.33% |
| அனுராதபுரம் | 10.26% |
| திருகோணமலை | 8.99% |
| கேகாலை | 8.83% |
| பொலனறுவை | 8.40% |
| கம்பகா | 6.45% |
| மட்டக்களப்பு | 3.49% |
| களுத்துறை | 3.21% |
| புத்தளம் | 0.74% |
| வவுனியா | 1.78% |
| அம்பாறை | 1.73% |
| காலி | 1.46% |
| மாத்தறை | 1.29% |
| பதுளை | 0.82% |
| இரத்தினபுரி | 0.68% |
| மன்னார் | 0.47% |
| கொழும்பு | 5.87% |
| மொத்தம் | 100% |

(மூலம் - வினாக்கொத்து, பங்குனி, 2017)

தம்புள்ள விவசாய சந்தையிலிருந்து பொருட்களை கொள்வனவு செய்து இலங்கையின் 21 மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது.

அட்டவனை -2 தம்புள்ள விவசாய சந்தையில் இருந்து பொருட்களை விநியோகம் செய்யும் மாவட்டங்கள்

| மாவட்டங்கள் | வீதம் % |
|---|---|
| மாத்தளை | 6.67% |
| நுவரேலியா | 3.07% |
| குருநாகல் | 13.45% |
| கண்டி | 12.33% |
| அனுராதபுரம் | 10.26% |
| திருகோணமலை | 8.99% |
| கேகாலை | 8.83% |
| பொலனறுவை | 8.40% |
| கம்பகா | 6.45% |
| மட்டக்களப்பு | 3.49% |
| களுத்துறை | 3.21% |
| புத்தளம் | 0.74% |
| வவுனியா | 1.78% |
| அம்பாறை | 1.73% |
| காலி | 1.46% |
| மாத்தறை | 1.29% |
| பதுளை | 0.82% |
| இரத்தினபுரி | 0.68% |
| மன்னார் | 0.47% |
| கொழும்பு | 5.87% |
| மொத்தம் | 100% |


(மூலம் - வினாக்கொத்து, பங்குனி, 2017)

இங்கு பொருட்களை கொண்டுவந்து சந்தைபடுத்தல் மற்றும் கொள்வனவு செய்வோர், எண்ணிக்கை அதிகமாகவும் மத்திய மாகாணம் மாத்தளை, நுவரேலியா, கண்டி பகுதியுடன் நெருங்கிய சேவை மையமாகவும் தம்புள்ள விவசாய சந்தைபகுதி காணப்படுகின்றது.

தம்புள்ள விவசாய சந்தையின் வினைத்திறன் செயற்பாடுகளை மேற்கொள்ள அங்குள்ள அடிப்படை உட்கட்டமைப்பு வசதிவாய்ப்புக்களை மதிப்பிடுவதன் மூலம் முடிவாக தம்புள்ள விவசாய சந்தையில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவு வழங்கப்பட்டு காணப்பட்டாலும் வினைதிறன் அதிகரிப்பிற்கு உட்கட்டமைப்பு வசதியின் தேவைப்பாடுகள் மேலும் அதிகரித்து கொண்டு செல்கின்றன. தற்போது முக்கிய உட்கட்டுமான ரீதியான பிரச்சனையாகநிலப்பற்றாக்குறை இ வாகன தரிப்பிடவசதி பற்றாக்குறை, களஞ்சியப்படுத்தல் வசதியீன்மை, குளிரூட்டல் வசதியீன்மைபோன்றன

காணப்படுகின்றது.

உரு - 1 தம்புள்ள விவசாய சந்தையின் தொழிற்பாட்டினை அதிகரிப்பதற்கு வேலை செய்வோர் எதிர்பார்க்கும் அபிவிருத்திகள்




(மூலம் - வினாக்கொத்து, பங்குனி, 2017)

தம்புள்ள விவசாய சந்தையின் வினைதிறனுக்கு போக்குவரத்து வலையமைப்பு சிறப்பாக உள்ளமை வாய்ப்பாக காணப்படுகின்றது. மற்றும் நீர்வழங்கல் மலசலகூட வசதி, மின்சாரம், கழிவகற்றல், வாகன தரிப்பிட வசதி, வங்கிச்சேவை போன்றவற்றை கொண்டு காணப்படுவதுடன் இவற்றில் மக்கள் எதிர்காலத்தில் எதிர்பார்க்கும் அபிவிருத்திகளும் காணப்படுகின்றது. உட்கட்டுமான வசதிவாய்ப்புக்களை அதிகரிப்பதுடன் மூலம் வினைத்திறன் தன்மை சந்தையின் தொழிற்பாடுகளை மேலும் அதிகரிக்க முடியும்.

.

தம்புள்ள விவசாய சந்தையின் நிகழும் விவசாய உற்பத்தி பரிமாற்றத்தால் ஏற்படும் பொருளாதார நன்மைகளை மதிப்பிடுவதன் மூலம் அதன் முடிவாக தம்புள்ள விவசாய சந்தையின் பொருட்கள் பரிமாற்றத்தால் பொருட்களை கொண்டு வருகின்ற விநியோகஸ்தர்களான விவசாயிகள், சேகரிப்பாளர்களில் அதிகளவு பொருட்களை கொண்டுவருபவராக விவசாயிகள் காணப்படகின்றனர். இவர்கள் அதிகளவு பொருளாதார நன்மைகளை அடைபவராக உள்ளனர்.


தம்புள்ள விவசாய சந்தையிலிருந்து பொருட்களை கொள்வனவு செய்பவர்களாக மொத்த, சில்லறை விற்பனையாளர்கள், பொலரேடர்ஸ் போன்றனர் பொருளாதார ரீதியான வருமானங்களை பெற்று நன்மையடைகின்றனர். இவர்களில் மொத்த விற்பனையாளர்கள் அதிகளவு நன்மை அடைகின்றனர். தம்புள்ள விவசாய சந்தைக்கு வியாபார நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் ஒரு தடைவ வரும் போது 15000-20000 மேற்பட்ட வருமானத்தை அதிகம் பெறுவதுடன் பெறுமான ரீதியாக திருப்திதன்மை அடைகின்றனர். தரமான காய்கறி பழவகைகள் மூலம் இங்கு அதிக வருமானம் கிடைக்கின்றது.

அட்டவணை -3 தம்புள்ள விவசாய சந்தைக்கு ஒரு தடைவை கொண்டுவரும் நிறை

| பொருட்களின்நிறை | வீதம் % |
|---|---|
| <100Kg | 4.0% |
| 100-1000Kg | 28.0% |
| 1000-2000Kg | 36.7% |
| 2000-3000Kg | 18.0% |
| 3000-4000Kg | 5.3% |
| 4000-5000Kg | 3.3% |
| 5000-6000Kg | 1.3% |
| 6000-7000Kg | 2.7% |
| 7000-8000Kg | 2.7% |


(மூலம் - வினாக்கொத்து,பங்குனி,2017)

உரு -2 இலாபம் (Profit)




(மூலம் - வினாக்கொத்து,பங்குனி,2017)

உரு-3 வருமானம் தொடர்பான திருப்தி நிலை




(மூலம் - வினாக்கொத்து,பங்குனி,2017)

தம்புள்ள விவசாய சந்தைக்கு வழங்கப்பட்ட முதலீட்டில்

இருந்து அதற்கேற்ப வருமானம் திரும்ப கிடைக்கின்றதா? என்பதை மதிப்பிடுவதன் மூலம் அதன் முடிவாக தம்பள்ள விவசாய சந்தை 115 ரூபா மில்லியன் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான வருமானம் திரும்ப கிடைக்கப்பெற்றதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்கு வகிக்கக்கூடிய வருமானத்தினை தேசிய ரீதியில் வழங்குகின்றது. எடுத்துக்காட்டாக ஒரு மாத வாடகை வரி மூலம் 3,702,459 ரூபாவாக காணப்படுகின்றது. இது வருடத்திற்கு 44,429,508 ரூபாவாக காணப்படுகின்றது. இவ் விவசாய சந்தை உருவாக்கப்பட்டு 18 வருடங்களாக கிடைக்கப் பெற்ற வருமானம் 79,9731,144 ரூபா ஆகும். இது முதலீட்டின் 06 மடங்கை எட்டியுள்ளது.

இதனை விட கொமிசன் கட்டணம் போக்குவரத்து கட்டணம் என்பன வருமானம் அதிகளவு கிடைக்கப்பெறுகின்றது. போக்குவரத்து கட்டணமாக தினமும் 25170 ரூபா கிடைக்கின்றது. பருவகாலங்களில் உள்நுழையும் வாகனங்களின் எண்ணிக்கை 36000 ரூபா கிடைக்கின்றது. இவ் விவசாய சந்தையில் உள்ள கடைகள் 5 இலட்சம் ரூபா படி குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இதனால் 72 மில்லியன் வருமானம் கிடைக்கின்றது.

அட்டவணை- 4
தம்புள்ள விவசாய சந்தை மாதாந்த வருமான அறிக்கை

| Stalls block | Paid vat | Paid operation | Total paid rent |
|---|---|---|---|
| A-25 | 76,875 | 12,500 | 591,729 |
| B-25 | 76,875 | 12,500 | 594345 |
| C-25 | 76,875 | 12,500 | 524035 |
| D-25 | 76,875 | 12,500 | 578255 |
| E-25 | 76,875 | 12,500 | 580310 |
| F-25 | 76,875 | 12,500 | 566280 |
| G-07 | 21,525 | 3,500 | 267505 |
| 144 | 484,289 | 77000 | 3702459 |

(மூலம் தம்புள்ள விவசாய சந்தை முகாமைத்துவ அலுவலகம்)

அட்டவணை 4.16 கொமிசன் கட்டணம்

| விலை (ரூபா) | நிறை kg | கொமிசன் கட்டணம் |
|---|---|---|
| 1 -9.5 | 1 | 50 rjk; |
| 10-29.5 | 1 | 1.00 |
| 30-59.5 | 1 | 2.00 |
| 60-79.5 | 1 | 3.00 |
| 80-99.5 | 1 | 4.00 |
| 100 < | 1 | 5.00 |

(மூலம் தம்புள்ள விவசாய சந்தை முகாமைத்துவ அலுவலகம்)

ஒரு விவசாய சந்தை குறிப்பிட்ட ஒரு பிராந்திய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் என்ற அடிப்படையில் தலைப்பு தெரிவு செய்யப்பட்டது ஆனால் ஆய்வின் முடிவில் தனி ஒரு பிராந்தியத்திற்கு மட்டுமல்லாது இலங்கை முழுவதும் சேவையை வழங்குகின்றது என இனங்கானப்பட்டது.

## II. பரிந்துரைகள்

தம்புள்ள விவசாய சந்தையின் பொருளாதார ரீதியான நன்மைகளையும் வினைத்திறனான செயற்பாடுகளையும் இலங்கையில் அதிகரிக்கின்ற சனத்தொகைக்கு ஏற்ப மக்கள் நுகர்வு போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஏற்பவும் காய்கறி பழவகைகளுக்கு அதிகரிக்கின்ற கேள்விக்கு ஏற்பவும் அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. தம்புள்ள விவசாய சந்தையில் தொழில்புரியும் வர்த்தக சமூகத்திற்கு பல்வேறுபட்ட பிரச்சனைகள், சவால்கள் காணப்படுகின்றது என்பது பகுப்பாய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது. இப்பிரச்சனை சவால்களுக்கான தீர்வுகளாக ஆய்வாளனால் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றது.

1. வாகனதரிப்பிட வசதிவாய்ப்புக்களை தம்புள்ள விவசாய சந்தையில் அதிகரித்தல். தம்புள்ள விவசாய சந்தையில் உள்ள வாகன தரிப்பிட பற்றாக்குறையை தீர்ப்பதற்காக அருகில் உள்ள நிலங்களையும் தம்புள்ள விவசாய சந்தையின் தேவைக்காக பயன்படுத்தி வாகனதரிப்பிட வசதிகளை அதிகரித்தல்.
2. தம்புள்ள விவசாய சந்தையில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் இளைப்பாறக்கூடிய இருக்கை வசதிவாய்ப்புக்களை உருவாக்குதல். இயற்கையான சூழலாக மாற்றுதல்.
3. களஞ்சியப்படுத்தல் வசதிவாய்ப்புக்களை உருவாக்கல்தம்புள்ள விவசாய சந்தையில் களஞ்சியப்படுத்தல் வசதியீன்மை முக்கிய பற்றாக்குறையாக காணப்படுகின்றது. களஞ்சியப்படுத்தல் வசதிகள் மூலம் மேலதிக காய்கறிகளான மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு வகைகளை சிறப்பாக சந்தைப்படுத்தமுடியும்.
4. குளிரூட்டல் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தல். தம்புள்ள விவசாய சந்தையில் மேலதிகமாக வருகின்ற புதிய காய்கறி பழவகைகளை சந்தைபடுத்தவும் காய்கறி பழவகை பழுதடையும் தன்மையை கட்டுப்படுத்துவதற்கும் புதிய பழங்கள் காய்கறி, பழங்களை பெற்றுக்கொள்ளவும் குளிரூட்டல் வசதிகளை உருவாக்கல்.
5. தம்புள்ள விவசாய சந்தையில் கடைகளில் எண்ணிக்கையை அதிகரித்தல். அதாவது கடைகளுக்கான கேள்வி அதிகமாக இருத்தல். ஆனால் இங்கு கடைகள் மட்டுப்படுத்தப்பட்ட

அளவில் காணப்படுகின்றது. கடைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும் மேலும் தம்புள்ள விவசாய சந்தையின் தொழிற்பாடுகள், வர்த்தக நடவடிக்கைகளை அதிகரிக்க முடியும்.

6. தம்புள்ள விவசாய சந்தைக்கு பொருட்களை கொண்டு வருகின்ற விவசாயிகள் சேகரிப்பாளர்கள், பொருட்களை வாங்குகின்றவர்களை பாதிக்காத வகையில் கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயித்தல். தம்புள்ள விவசாய சந்தையில் பொருட்கள் பேரம் பேசி பெற்றுக்கொள்கின்றமுறை காணப்படுகின்றது. இதனால் விவசாயிகள் அதிகம் நட்டத்தினை எதிர்கொள்கின்றனர். எனவே தம்புள்ள விவசாய முகாமைத்துவ அலுவலகத்தினால் பொருத்தமான கட்டுப்பாட்டு விலை நிர்ணயங்களை செய்தல்.
7. வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதி தன்மைகளை ஊக்குவித்தல்.
8. தம்புள்ள விவசாய சந்தை அனைத்து வகையான காய்கறி பழ வகைகளையும் வழங்கக்கூடிய கொண்டு காணப்படுவதால் அரசு அப்பொருட்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதிசெய்யக்கூடிய நடவடிக்கையில் ஈடுபடுதல் மற்றும் ஊக்குவித்தல் வேண்டும்.
9. இலங்கையில் காணப்படுகின்ற 12 விவசாய சந்தைக்கு இடையிலான ஓர் ஒருங்கிணைந்த தன்மையினை மேம்படுத்தல்.
10. தம்புள்ள விவசாய சந்தையினை மையமாக கொண்டு அதிகரிக்கின்ற பொருட்கள் சேவைகளை சரியாக விவசாய சந்தைக்கு இடமாற்றங்களை மேற்கொண்டு இதனூடாக பொருளாதார நன்மைகளை விஸ்தரித்தல்.
11. வடமாகாணத்திற்கு விவசாய பொருட்களை கொள்வனவு செய்து கொண்டு வருவதற்கும் தம்புள்ள விவசாய சந்தைக்கு பொருட்களை கொண்டு செல்வதற்குமான வாய்ப்பினை அதிகரித்தல். மாகாண ரீதியிலான பங்களிப்பினை வடமாகாணத்தின் பங்கு குறைவாக காணப்படுகின்றது. ஆகவே வடமாகாணத்தில் எல்லை வரை தம்புள்ள விவசாய சந்தையின் சேவையை விஸ்தரித்தல் வேண்டும்.
12. தம்புள்ள விவசாய சந்தைக்கு அருகில் தகவல் வழங்கும் மையத்தினை உருவாக்கல் விவசாயிகளுக்கு அவர்கள் எந்த காலப்பகுதியில் எந்த பயிர்செய்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ன வகையான உர பாவனையை பயன்படுத்தல் போன்ற அறிவுறுத்தல்களை தகவல் மையங்களை உருவாக்கி வழங்குவதன் மூலம் விவசாய நடவடிக்கையை ஊக்குவிக்க முடியும்.

மேலே கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை வினைத்திறனாகவும் செயற்படுத்தும் போது தம்புள்ள விவசாய சந்தையின் வினைத்திறனான செயற்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் தேசிய, சர்வதேச ரீதியில் பொருளாதார சாத்திய தன்மைகளை அதிகரிப்பதோடு இலங்கையின் விவசாய துறையின் நீண்ட கால நிலைத்திருப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

## Reference

1. Japan International Cooperation Agency, (2013). "Democratic socialist republic of sri lanka data collection survey on agricultural distribution network and marketing" Final report. Srilanka: Jappan Internal Cooperational Agency, Available at:http://open_jicareport.jica.go.jp/pdf/12115689.pdf [Accessed 28th June. 2017].
2. Dambulla Agriculture Market Management Trust Office, (2017). Dambulla Agriculture Market Management Trust Office Bill income Report. Dambulla: Market Management Trust Office.
3. Dambulla Economic Center, (2002) Dambulla Economic Center Annual report. Dambulla: Dambulla Economic Center.
4. Ravichandran .T, (2002), "Efficiency of the Marketing System for Selected Vegetables in Sri Lanka",Srilanka:Ravichandran, Availableat:http://harti.nsf.ac.lk/bitstream/handle/1/144/SJAS_2002_V10%2801%29-41-51.pages.pdf?sequence = 2&is Allowed =y [Accessed 23rd May.2017].
5. Ranathilaka M.B and Kuntoro Boga Andri , (2014), "Market Efficiency on Vegetable Commodities in Developing Country: Case Study from Dambulla" Wholesale Market in Sri Lanka, Srilanka: Ranathilaka M.B and Kuntoro Boga Andri, Available at: https://scialert.net/fulltext/?doi=ijar.2014.99.109[Accessed 5th Apr.2017].